செய்தி வெளியீடு நாள் : 2.5.2023

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023-24 நிதியாண்டின் அறிவிப்புகளில் ஒன்றான மாநகர பேருந்து நிலையங்களை தலா ரூ.5 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகள் கொண்ட பேருந்து நிலையங்களாக மேம்படுத்துவது தொடர்பாக 5 மாநகர பேருந்து நிலையங்களில் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் ஆய்வு

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023-24 நிதியாண்டின் அறிவிப்புகளில் ஒன்றான மாநகர பேருந்து நிலையங்களை தலா ரூ.5 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகள் கொண்ட பேருந்து நிலையங்களாக மேம்படுத்துவது தொடர்பாக இன்று (02.05.2023) 5 சென்னைப் மாநகர பேருந்து நிலையங்களை மாண்புமிகு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் சென்று களஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2023-24 நிதியாண்டிற்கான அறிவிப்புகளில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு 50 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டது. இதில் சென்னைப் பெருநகர பகுதியிலுள்ள 26 சட்டமன்ற தொதிகளின் மேம்பாட்டிற்கான 34 அறிவிப்புகளில் செயல்படுத்தும் வகையில், 6 மாநகர பேருந்து நிலையங்களை தரம் உயர்த்துவது தொடர்பாக இன்று (02.05.2023) அம்பத்தூர் எஸ்டேட் பேருந்து நிலையம், பெரியார் நகர் பேருந்து நிலையம், திரு..வி.க.நகர் பேருந்து நிலையம், முல்லை நகர் பேருந்து நிலையம் மற்றும் கவியரசு கண்ணதாசன் நகர் பேருந்து நிலையம் ஆகிய 5 மாநகர பேருந்து நிலையங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இப்பேருந்து நிலையங்களை மேம்படுத்துதல், இயக்கப்படுகின்ற பேருந்துகள் முறையாகவும், சீராகவும் செல்வதற்கான வழிவகை செய்வது, பணிமனையில் நிர்வாக அலுவலகம் அமைப்பது, பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கான ஓய்வறைகளை மேம்படுத்துவது,

Verified RealEstate ™

பேருந்து நிலையத்திற்கு வரும் பயனாளிக்கான அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வது, நவீன கழிப்பிட வசதிகளை உருவாக்குவது போன்ற பல்வேறு பணிகளுக்காக ஒவ்வொரு பேருந்து நிலையங்களுக்கு தலா ரூ. 5 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகள் கொண்ட பேருந்து நிலையமாக மேம்படுத்துவது குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. **இவ்வாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வுகளின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா இ.ஆ.ப., சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் (அம்பத்தூர்) திரு.ஜோசப் சாமுவேல், (பெரம்பூர்) திரு.ஆர்.டி.சேகர், சென்னை மாநகர போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் திரு.அன்பு ஆபிரகாம், பெருநகர சென்னை மாநகராட்சி நகரமைப்புக் குழுத் தலைவர் திரு.இளைய அருணா, மண்டலக் குழுத் தலைவர்கள் (அம்பத்தூர்) திரு.பி.கே.மூர்த்தி, (திரு.வி.க நகர்) திருமதி.சரிதா மகேஷ் குமார், (தண்டையார்பேட்டை) திரு.நேதாஜி கணேசன், சி.எம்.டி.ஏ தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.பாலசுப்பிரமணியம், திரு.ருத்ரமூர்த்தி, திரு.ரவிக்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

Verified RealEstate ™